# மார்ச் - 05 - திங்கள்

சிலுவை ஜோன் யோசேப்பு

## என் நெஞ்சம் கடவுள்மீது, உயிருள்ள இறைவன்மீது தாகம் கொண்டுள்ளது: திபா. 42:2

### முதல் வாசகம் : 2 அரசர் 5 : 1 – 15

சிரியா மன்னனின் படைத்தலைவனான நாமான் தம் தலைவனிடம் சிறப்பும் நன்மதிப்பும் பெற்றிருந்தார். ஏனெனில் அவர் மூலமாய் ஆண்டவர் சிரியாவுக்கு வெற்றி அளித்திருந்தார். அவர் வலிமை மிக்க வீரர் ஆனால் தொழுநோயாளி. சிரியா நாட்டினர் ஒருமுறை கொள்ளையடிக்கச் சென்றபொழுது, இஸ்ரயேலைச் சார்ந்த ஒரு சிறுமியைக் கடத்திக் கொண்டு வந்திருந்தனர். அவள் நாமானின் மனைவிக்குப் பணிவிடை புரிந்து வந்தாள். அவள் தன் தலைவியை நோக்கி, "என் தலைவர் சமாரியாவில் இருக்கும் இறைவாக்கினர் முன்னிலையில் சென்றாரெனில், அவர் இவரது தொழுநோயைக் குணமாக்குவார்" என்றாள். எனவே நாமான் தம் தலைவனிடம் சென்று, "இஸ்ரயேல் நாட்டைச்சார்ந்த சிறுமி இன்னின்னவாறு கூறுகின்றாள்" என்று அவனுக்குத் தெரிவித்தார். அப்பொழுது சிரியா மன்னர், "சென்று வாரும். நான் இஸ்ரயேல் அரசனுக்கு மடல் தருகிறேன்" என்றார். எனவே நாமான் ஏறத்தாழ நானூறு கிலோ வெள்ளியையும், ஆறாயிரம் பொற்காசுகளையும், பத்துப் பட்டாடைகளையும் எடுத்துக்கொண்டு பயணமானார். அவர் இஸ்ரயேல் அரசனிடம் அம்மடலைக் கொடுத்தார். அதில், "இத்துடன், என் பணியாளன் நாமானை உம்மிடம் அனுப்புகிறேன். அவனது தொழுநோயை நீர் குணமாக்கவேண்டும்" என்று எழுதப்பட்டிருந்தது. இஸ்ரயேல் அரசன் அம்மடலைப் படித்தவுடன் தன் ஆடைகளைக் கிழித்துக் கொண்டு, "நானென்ன கடவுளா? உயிரைக் கொடுக்கவும், உயிரை எடுக்கவும் என்னால் இயலுமா? சிரியா மன்னன் ஒருவனை என்னிடம் அனுப்பி அவனுக்குள்ள தொழு நோயைக் குணப்படுத்தச் சொல்கிறானே! என்னோடு போரிட அவன் வாய்ப்புத் தேடுவதைப் பார்த்தீர்களா!" என்று கூறினான். கடவுளின் அடியவரான எலிசா இஸ்ரயேல் அரசன் இவ்வாறு தன் ஆடைகளைக் கிழித்துக் கொண்ட செய்தியைக் கேள்வியுற்று அவனிடம் ஆளனுப்பி, "நீர் ஏன் உம் ஆடைகளைக் கிழித்துக் கொண்டீர்? அவன் என்னிடம் வரட்டும். இஸ்ரயேலில் ஓர் இறைவாக்கினர் உள்ளார் என அவன் அறியட்டும்" என்று சொன்னார். அவ்வாறே நாமான் தம் குதிரைகளுடனும் தேருடனும் எலிசா வீட்டு வாயில்முன் வந்துநின்றார். எலிசா, "நீ போய் யோர்தானில் ஏழுமுறை மூழ்கினால், உன் உடல் நலம் பெறும்" என்று ஆளனுப்பிச் சொல்லச் சொன்னார். எனவே, நாமான் சினமுற்று வெளியேறினார். அப்பொழுது அவர், "அவர் என்னிடம் வந்து, என் அருகில் நின்று, தம் கடவுளாகிய ஆண்டவரின் பெயரைக் கூவியழைத்து, தொழுநோய் கண்ட இடத்தின்மேல் தம் கையை அசைத்துக் குணப்படுத்துவார் என்று நான் எண்ணியிருந்தேன். அபானா, பர்பார் என்ற தமஸ்கு நதிகள் இஸ்ரயேலில் உள்ள ஆறுகள் அனைத்தையும்விட மேலானவை அல்லவா? அவற்றில் மூழ்கி நான் நலமடைய முடியாதா?" என்று கூறி ஆத்திரமாய்த் திரும்பிச் செல்லலானார். அப்பொழுது அவருடைய வேலைக்காரர்கள் அவரை அணுகி, அவரிடம், "எம் தந்தையே! இறைவாக்கினர் இதைவிட அரிதான ஒன்றை உமக்குக் கூறியிருந்தால், நீர் அதைச் செய்திருப்பீர் அல்லவா? மாறாக, "மூழ்கி எழும் நலமடைவீர்" என்று அவர் கூறும்போது அதை நீர் செய்வதற்கென்ன? "என்றனர். எனவே நாமான் புறப்பட்டுச் சென்று கடவுளின் அடியவரது வாக்கிற்கிணங்க யோர்தானில் ஏழுமுறை மூழ்கியெழ, அவர் நலமடைந்தார். அவரது உடல் சிறுபிள்ளையின் உடலைப்போல் மாறினது. பின்பு அவர் தம் பரிவாரம் அனைத்துடன் கடவுளின் அடியவரிடம் திரும்பி வந்து, "இஸ்ரயேலைத் தவிர வேறு எந்த நாட்டிலும் கடவுள் இல்லையென இப்போது உறுதியாக அறிந்து கொண்டேன். இதோ, உம் அடியான்! எனது அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளும்" என்றார்.

**பதில்பாடல் :** என் நெஞ்சம் உயிருள்ள இறைவன் மீது
தாகம் கொண்டுள்ளது

### நற்செய்தி : லூக்கா 4 : 24 – 30

இயேசு நாசரேத்துக்கு வந்தபோது தொழுகைக் கூடத்தில் மக்களை நோக்கிக்கூறியதாவது: "நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. உண்மையாக நான் உங்களுக்குச் சொல்கிறேன் எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகளாக வானம் பொய்த்தது நாடெங்கும் பெரும் பஞ்சம் உண்டானது. அக்காலத்தில் இஸ்ரயேலரிடையே கைம்பெண்கள் பலர் இருந்தனர். ஆயினும் அவர்களுள் எவரிடமும் எலியா அனுப்பப்படவில்லை சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்ணிடமே அனுப்பப்பட்டார். மேலும், இறைவாக்கினர் எலிசாவின் காலத்தில் இஸ்ரயேலரிடையே தொழு நோயாளர்கள் பலர் இருந்தனர் ஆயினும் அவர்களுள் எவருக்கும் நோய் நீங்கவில்லை. சிரியாவைச் சார்ந்த நாமானுக்கே நோய் நீங்கியது" என்றார். தொழுகைக்கூடத்தில் இருந்த யாவரும் இவற்றைக் கேட்டபோது, சீற்றங் கொண்டனர். அவர்கள் எழுந்து, அவரை ஊருக்கு வெளியே துரத்தி, அவ்வூரில் அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளிவிட இழுத்துச் சென்றனர். அவர் அவர்கள் நடுவே நடந்து சென்று அங்கிருந்து போய்விட்டார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகமானது ஆண்டவர் யார் யாரின் மூலம் தனது வல்லமையை வெளிப்படுத்த வேண்டுமோ அவர்கள் எங்கிருந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் அவர்கள் மூலமாக வெளிப்படுத்துவதைப் பார்க்கின்றோம். சிரியா நாட்டுத் தளபதியான நாமான் மூலமாக ஆண்டவர் சிரியா நாட்டிற்கே வெற்றியளித்திருந்தார். அவர் ஒரு தொழுநோயாளி தொழுநோய் என்பது கொடிய நோய். அந்நோயாளியை ஒருவரும் ஏற்றுக்கொள்வதில்லை. அந்நோய் யாருக்குள்ளதோ அவரைப் புறம்பே தள்ளி வைத்துவிடுவார்கள். அவர் நோயிலிருந்து குணம்பெற இஸ்ராயேலுக்கு அனுப்பப்படுகிறார். எலிசா என்ற இறைவாக்கினர் யோர்தான் நதியில் ஏழு முறை "மூழ்கி எழும் நலமடைவீர்" என்றுகூற அவரும் மூழ்கி எழுந்தார். இதன் மூலம் அவர் பரிசுத்தப்படுவதையும் கிறிஸ்துவுக்குள் தன்னை முழுவதுமாக ஒப்படைத்ததையும் அதனால் அவர் குணமடைந்ததையும் பார்க்கின்றோம். (2அர.5:13) எனவேதான் ஆண்டவரின் அடியானாகிய எலிசா மூலமாக இஸ்ராயேலர் மத்தியில் பல தொழுநோயாளிகள் இருந்தும் சிரியாவைச் சேர்ந்த நாமானுக்கே அந்நோயிலிருந்து விடுதலை கொடுக்க சித்தங்கொண்டார். அதே போன்று இஸ்ராயேலரிடம் பல கைம்பெண்கள் இருந்தும் சீரிபாத்தைச் சேர்ந்த கைம்பெண்ணிடமே எலிசா அனுப்பப்பட்டார். இன்று நாங்கள் கூட பரிசுத்தப்படாமல். தூய்மையற்றவாகளாக இருப்பதால்தான் விடுபடமுடியாத நோய்களால் வேதனைப்பட்டு, எழுந்து நடக்க முடியாமல் முடங்கிப்போய்க் கிடக்கின்றோம். இறைவன் எங்களைத் தன்னிடம் வர தூய்மைப்படும் படியாக கேட்கிறார். அன்று திருமுழுக்கு யோவான் மனமாறும் படியாகவே யோர்தான் நதியில் திருமுழுக்கு கொடுத்தார். அவர்களும் தூய்மையடைந்தார்கள். எனவே நாங்களும் கிறிஸ்துவுக்குள் எங்களை ஆழப்படுத்தி தூய்மையடைந்தவர்களாக மாற இத் தவக்காலத்தில் எங்களைத் தயார்படுத்துவோம்.